//

# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.</u>

## <u>அசல் வழக்கு எண்.29/2023</u>

2025ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11ம் தேதி வாதி தரப்பு சாட்சியின் **வா.சா.1**-ன் வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி திருமதி. S. சுசீலா, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சத்தியமங்கலம், என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.ராஜ்குமார் | வட்டம் | : | |
| த/பெ. | : | | மாவட்டம் | : | |
| க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |

**வா.சா.1 : முதல் விசாரணை**:

நான் இவ்வழக்கின் வாதியின் பொது அதிகார முகவர் ஆவேன். எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகளை உண்மையென நேரில் அறிந்து கையெழுத்து செய்துள்ளேன். 13.08.2019ம் தேதியிட்ட வாதி பெயரில் உள்ள செட்டில்மெண்ட் பத்திரம் (Doc.No.4131/2019) சான்று நகல் **வா.சா.ஆ,1** ஆகவும், 11.10.2018ம் தேதியிட்ட வாதியின் கணவர் பெயரில் உள்ள செட்டில் மெண்ட் பத்திரம் (Doc.No.6315/2018) சான்று நகல் **வா.சா.ஆ.2** ஆகவும், 03.09.1981ம் தேதியிட்ட பிரதிவாதியும் அவரது தாயார் ரங்கம்மாளும் ஏற்படுத்திக்கொண்ட பாகக்கறார் பத்திரம் சான்று நகல் **வா.சா.ஆ.,3** ஆகவும், 06.04.2015 ம் தேதியிட்ட பிரதிவாதி அவரது மகன்களான S.T.கார்த்திக் மற்றும் S.T.கதிரேஷ்குமார் பாகப்பிரிவினை பத்திரம் சான்று நகல் **வா.சா.ஆ.4** ஆகவும், 18.09.2019 ம் தேதியிட்ட தாவாச் சொத்திற்கான பட்டா கணினி நகல் **வா.சா.ஆ.5** ஆகவும், 18.09.2019 ம் தேதியிட்ட தாவாச் சொத்திற்கான அ பதிவேடு கணினி நகல் **வா.சா.ஆ.6** ஆகவும், 18.09.2019 ம் தேதியிட்ட தாவாச் சொத்திற்கான புல வரைபடம் கணினி நகல் **வா.சா.ஆ.7** ஆகவும், 13.02.2023ம் தேதியிட்ட வில்லங்க சான்று கணினி நகல் **வா.சா.ஆ.8** ஆகவும், 10.05.2024ம் தேதியிட்ட வாதி எனக்கு எழுதிகொடுத்த பொது அதிகார ஆவணத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.9** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

SELVAM SUSILA

Digitally signed by SELVAM SUSILA
Date: 2025.09.11 18:10:05 +0530

District Munsif